

## Enrolment policy - Tamil

# பாடசாலைச் சேர்க்கைக் கொள்கை

## பெற்றோர்களுக்கான தகவல்கள்

ஒவ்வொரு மாணவ மாணவிக்கும் அவருடைய உள்ளூர்ப் பாடசாலையில் ஒரு இடம் இருப்பதை உறுதிப்படுத்தும் *‘கல்விச் சட்டம் 1990’*-இன் கீழான கடப்பாடுகளைப் பூர்த்தி செய்யப் பாடசாலைகளுக்கு உதவுவதற்காக ‘அரச பாடசாலைச் சேர்க்கைக் கொள்கை’ (Enrolment of Students in NSW Government Schools) எனும் முறைமை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒளிவு மறைவற்ற பெயர் சேர்க்கைச் செயல்பாட்டு முறை ஒன்றினை இந்தக் கொள்கைத் திட்டமானது அலுவலகப் பணியாளர்களுக்கும் சமூகத்தினருக்கும் அறிமுகப்படுத்துகிறது.

### பாடசாலைக் கொள்கைத் திட்டம் ஏன் மீள்பார்வையிடப்பட்டுள்ளது?

இந்த மாநிலம் எங்குமுள்ள பல சமூகங்களில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இதற்கு முன் எப்போதும் கண்டிராத வீதங்களில் சில சமூகங்கள் வளர்ச்சியடைந்து வருகின்றன. உள்ளூர்ப் பகுதிக்கு அப்பாற்பட்ட இடங்களிலிருந்து வரும் மாணவ மாணவியருக்கு இடம் அளித்துவந்த சில பாடசாலைகளினால் இப்போது அப்படிச் செய்ய இயலாமல் இருக்கிறது.

பாடசாலைச் சேர்க்கைக்கான அனைத்து விண்ணப்பங்களையும் நிர்வகிக்கவும், சேர்க்கைகள் விடயத்தில் ஒரே மாதிரியான முடிவுகளைப் பாடசாலைகள் மேற்கொள்வதற்கு ஊக்கமளிக்கவும், பாடசாலைச் சேர்க்கைக்கான தெரிவுகளைப் பற்றிப் பெற்றோர்கள் தெளிவாகத் தெரிந்துகொள்வதை உறுதிசெய்யவும் ஏது செய்யும் வகையில் இத்திருத்தியமைக்கப்பட்ட புதிய கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது.

### ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் யாவை?

#### The enrolment cap

The enrolment cap என்பது ஒரு பாடசாலையில் நிரந்தரமாக எத்தனை மாணவ மாணவியரைச் சேர்க்க இயலும் என்பதை அடிப்படையாகக் கொண்டதாகும்.  உள்ளூர்ப் பகுதிகளைச் சேராத மாணவ மாணவியரைச் சேர்த்துகொள்ளும் திறன் ஒரு பாடசாலைக்கு இருக்கக்கூடுமா, இல்லையா என்பதை the enrolment cap நமக்குச் சொல்லும். ஒரு பாடசாலையினால் ஏற்றுக்கொள்ள இயலுமான உள்ளூர் சேர்க்கைகளுக்கான இலக்கு அல்லது வரையறை அல்ல இது.

Term 4 2019- இல் இருந்து உள்ளூர் மாணவ மாணவியர் சேர்க்கைப் பகுதியைக் கொண்டுள்ள பாடசாலைகளுக்கு cap ஒன்று ஏற்படுத்தப்படும்.

The enrolment cap -இற்கு உள்ளாக குறிப்பிட்ட ஒரு ஆண்டில் பாடசாலையில் சேரும் சாத்தியமுள்ள உள்ளூர் மாணவ மாணவியருக்கென்று அதிகளவு எண்ணிக்கையிலான இடங்கள் ஒதுக்கப்பட்டாக வேண்டும். இவ்வாறாக ஒதுக்கப்படும் இடங்கள் buffer என்று அழைக்கப்படும். இந்தக் காரணத்தை முன்னிட்டு, அசாதாரணமான சூழ்நிலைகள் இருந்தாலொழிய, buffer மட்டத்தினை எட்டிய பிறகு உள்ளூர்ப் பகுதியைச் சேராத மாணவ மாணவியரை பாடசாலைகள் ஏற்றுக்கொள்ளாது.

#### 100 புள்ளி வதிவிட அடையாள சோதனை

buffer அல்லது cap -இனை எட்டும் நிலையிலுள்ள அல்லது buffer அல்லது cap -ஐ எட்டிய பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்க்க விரும்பும் பெற்றோர்கள் 100 புள்ளி வதிவிட அடையாள சோதனை ஒன்றைப் பூர்த்தி செய்யுமாறு கேட்கப்படுவார்கள், பாடசாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள உள்ளூர்ப் பகுதிகளில்தான் அவர்கள் வசிக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்த இவ்வாறு செய்யப்படும். தமது பிள்ளையின் தற்போதைய விலாசத்தினைச் சரிபார்ப்பதற்காக பெற்றோர்கள் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டியிருக்கும் என்பது இதன் பொருளாகும்.

பிள்ளையின் சேர்க்கைக்குத் தேவைப்படும் தகவல்களை மட்டுமே பாடசாலைகள் நாட வேண்டும் என்பதற்காக வதிவிட விலாச சோதனைக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் அட்டவணை ஒன்றினை https://education.nsw.gov.au/policy-library/policies/enrolment-of-students-in-nsw-government-schools. எனும் திணைக்களத்தினது வலைத்தளப் பக்கத்தில் காணலாம்.

#### உள்ளூர்ப் பகுதி சாரா மாணவ மாணவியரது சேர்க்கைக்கான தெரிவுத் தேவைப்பாடுகள்

சகோதர சகோதரியர் சேர்க்கைகளுக்குத் தெளிவான முந்துரிமை (இயலுமான தருணங்களில்) அளிக்கப்படும், மற்றும் உள்ளூர்ப் பகுதியைச் சேராத மாணவ மாணவியரது சேர்க்கைக்கான தெரிவுத் தேவைப்பாடுகளில் மாணவ மாணவியரது திறமை, செயற்பாடுகள் அல்லது சாதனைகள் ஆகியன உள்ளடங்காது.



NSW GOVERNMENT

## எவற்றில் மாற்றங்கள் இல்லை?

மாணவ மாணவியர் சேர்க்கைக்கான உச்ச நிலை (cap status) எதுவாக இருப்பினும், உள்ளூர்ப் பகுதிகளில் வாழும் மாணவ மாணவியரைப் பாடசாலைகள் தொடர்ந்து சேர்த்துக்கொள்ளும்.

உள்ளூர்ப் பகுதிகளைச் சாராத மாணவ மாணவியருடைய சகோதரங்களது சேர்க்கைக்கான உரிமைகளில் எந்த மாற்றமும் இல்லை. இடங்கள் உள்ள பாடசாலைகளில், சேர்க்கைக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் அதன் நற்கூறு அடிப்படையில் பாரிசீலிக்கப்படும். விண்ணப்பதாரரின் சகோதரங்கள் அந்தப் பாடசாலையில் படித்துக்கொண்டிருக்கிறார்களா என்பதும் கருத்தில் கொள்ளப்படும். சேர்க்கைகளுக்கான உச்ச நிலையைப் பாடசாலை அடையாதிருந்தால், வேறு பகுதிகளிலிருந்து வரும் சகோதரங்களது சேர்க்கை விண்ணப்பங்களுக்கு முந்துரிமை அளிக்கப்படும்.

பாடசாலைச் சேர்க்கைச் செயல்பாட்டு முறையின் போது பாடசாலைகள் பெற்றோர்களுக்கு ஆதரவுதவியும் அறிவுரையும் அளிப்பதைத் தொடரும். குறிப்பாக, பாதிப்படையும் நிலையிலுள்ள மாணவ மாணவியர் மற்றும் அவர்களது குடும்பங்களது அசாதாரணமான மற்றும் கருத்தில் அவசியம் கொள்ளப்படவேண்டிய சூழ்நிலைகளை மதிப்பீடு செய்வதும் இதில் உள்ளடங்கும்.

சேர்க்கை விண்ணப்பங்களைப் பற்றிய முடிவுகளை மேற்கொள்ளும்போது, நியாயமான மற்றும் நிலையான முறையிலும், ஒளிவு மறைவில்லாமலும், பொறுப்பேற்கும் வகையிலும் கொள்கைகளைப் பின்பற்றுவதைப் பாடசாலைகள் தொடரும். நியாமான முறையில் செயல்பாட்டு முறைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதைத் தீர்மானிப்பதற்காக மேல்முறையீடு செய்யும் உரிமை பெற்றோர்களுக்கு உண்டு.

## ஆனால், ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் எதைக் குறிக்கும்?

### என்னுடைய பிள்ளை ஏற்கனவே ஒரு பாடசாலையில் சேர்க்கப்பட்டிருக்கிறது, ஆனால் நாங்கள் அந்த பாடசாலையினது உள்வாங்குப் பகுதிக்குள்ளாக வசிக்கவில்லை என்றால் என்ன ஆகும்?

NSW அரச பாடசாலைகளில் ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ள பிள்ளைகளை மீள்பார்வை செய்யப்பட்ட கொள்கைகள் பாதிக்காது என்பதால் உங்கள் பிள்ளை அந்தப் பாடசாலையிலேயே தொடர்ந்து நீடிக்கும்.

### என்னுடைய பிள்ளை சேர்க்கப்பட்டபோது நாங்கள் பாடசாலைப் பகுதிக்குள்ளாக இருந்தோம். அதற்குப் பிறகு அரசாங்கம் இந்தப் பாடசாலையின் எல்லைப் பகுதிகளை மாற்றியமைத்துவிட்டதால் எங்கள் வீடு இப்போது பாடசாலை எல்லைக்கு வெளியே இருக்கிறது, மற்றும் எனக்கு உள்ள வேறு பிள்ளைகளும் அதே பாடசாலைக்குச் செல்ல வேண்டுமென நான் விரும்புகிறேன். எனக்குள்ள விருப்பத் தெரிவுகள் யாவை?

ஒரு பாடசாலையின் உள்ளூர் உள்வாங்குப் பகுதிகளை மாற்றிச் சரி செய்யவேண்டிய தேவை சில வேளைகளில் திணைக்களத்திற்கு ஏற்படும். ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ள ஒரு பிள்ளை இருக்கும் ஒரு குடும்பம் இதற்குப் பிறகு பாடசாலையின் உள்ளூர் உள்வாங்குப் பகுதிக்கு வெளியே அமைந்துவிடும் நிலை ஏற்படலாம். இப்படி நேரிடும்போது, ஒரு பாடசாலை buffer அல்லது cap -இனைத் தாண்டிவிட்டிருந்தாலும், அந்தக் குடும்பத்தினரால் சகோதரங்களை அதே பாடசாலையில் இப்போதும் சேர்க்க இயலும்.

### NSW அரச பாடசாலை ஒன்றில் வெளிப் பகுதி மாணவ மாணவியாக என் பிள்ளை ஏற்கனவே சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்தப் பாடசாலையில் என்னுடைய மற்ற பிள்ளைகளை என்னால் சேர்க்க இயலுமா?

இது பாடசாலையின் உள்வாங்குத் திறனைப் பொறுத்து அமையும்:

- பாடசாலையானது அதன் **buffer -ஐ நெருங்கவில்லையென்றால்,** சகோதரங்களை அதே பாடசாலையில் சேர்க்க இயலுமாக இருக்கலாம். உண்மையில், இயலுமான தருணங்களில் தற்போது சேர்க்கப்பட்டுள்ள மாணவ மாணவியரது சகோதரங்களுக்கு உள்ளூர்ப் பகுதியைச் சேராத சேர்க்கை விண்ணப்பங்களைத் தாண்டிய முந்துரிமை அளிக்கப்படும்.
- பாடசாலையானது அதன் **buffer -ஐ நெருங்கிக் கொண்டிருந்தால்,** உள்ளூர்ப் பகுதியைச் சேராத சேர்க்கைகளுக்கான குழு ஒன்றைப் பாடசாலை அமைக்கும். உள்ளூர்ப் பகுதியைச் சேராத சேர்க்கை விண்ணப்பங்கள் buffer -இற்குக் கீழாக உள்ள இடங்களின் எண்ணிக்கையைத் தாண்டும்போது, உள்ளூர்ப் பகுதியைச் சேராத சேர்க்கை விண்ணப்பங்களை இந்தக் குழு கருத்தில் கொள்ளும். இப்படிப்பட்ட தருணங்களில், தற்போது சேர்க்கப்பட்டுள்ள மாணவ மாணவியரது சகோதரங்களுக்கு, இயலுமான சமயத்தில், உள்ளூர்ப் பகுதியைச் சேராத சேர்க்கை விண்ணப்பங்களைத் தாண்டிய முந்துரிமை அளிக்கப்படும்.
- பாடசாலையுள்ள **இடங்கள் அனைத்தும் நிரம்பியிருந்தால்,** அசாதரணமான சூழ்நிலைகள் இருந்தாலொழிய, உள்ளூர் சாரா சேர்க்கை விண்ணப்பங்களைப் பாடசாலைகள் ஏற்காது.

### 2020-இல் என்னுடைய உள்ளூரைச் சேராத பாடசாலை ஒன்றில் எனது பிள்ளைக்கு அளிக்கப்பட்ட இடத்தினை நான் ஏற்றுக்கொண்டுவிட்டேன். இப்போது என்ன ஆகும்?

அந்த சேர்க்கை செயல்படுத்தப்படும். Term 4 2019 -க்கு முன்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட 2020-இல் கல்வியைத் துவங்கும் உள்ளூர் சாரா சேர்க்கைகளுக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படக்கூடாது.

### என்னுடைய உள்ளூர்ப் பகுதியில் இல்லாத பாடசாலை ஒன்றில் சேர்க்கைக்கான தகுதித்தேவைகள் யாவை?

பாடசாலையினது buffer -க்குக் கீழாக உள்ள எண்ணிக்கையிலான இடங்களுக்கும் அதிகமான கிராக்கி (demand) இருந்தால், உள்ளூர் சாரா சேர்க்கை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ள இயலுமான பாடசாலைகள் உள்ளூர் சாரா சேர்க்கைத் தெரிவுக் குழு ஒன்றினை ஏற்படுத்தும்.

சேர்க்கைக்கான தெரிவுத் தேவைப்பாடுகள் என்ன என்பதைப் பாடசாலை சமூகத்தினருக்குத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு பாடசாலைகளுக்கு உள்ளது.

### என்னுடைய சூழல்கள் சமாளிக்க இயலாதவையாக உள்ளன, இந்தப் பாடசாலையே என் பிள்ளைக்கு ஏற்றது என்று நினைக்கிறேன். ஆனால், இந்த பாடசாலையின் உள்வாங்குப் பகுதிக்கு வெளியே நான் இருக்கிறேன். நான் என்ன செய்யலாம்?

அனைவரது சூழல்களும் ஒரே மாதிரியானவை அல்ல என்பதை நாம் அறிவோம், ஆகவே கருத்தில் கொள்ளப்படவேண்டிய அசாதாரணமான மற்றும் கட்டாயப்படுத்தும் தருணங்கள் இருக்கும்.

இப்படிப்பட்ட தருணத்தில், நீங்கள் உங்களது உள்ளூர்ப் பாடசாலை அதிபருடன் பேசுவது நல்லது.

## தொடர்பு விபரங்கள்

பொது விசாரிப்புகளுக்கு 1300 679 332-இல் தொடர்புகொள்ளுங்கள், அல்லது DoEinfo@det.nsw.edu.au-க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

பாடசாலைச் சேர்க்கை பற்றிய விசாரிப்புகளுக்கு உங்களது உள்ளூர்ப் பாடசாலையுடன் தொடர்புகொள்ளுங்கள். https://education.nsw.gov.au/public-schools/going-to-a-public-school/finding-a-public-school எனும் வலைத்தளப் பக்கத்தில் பாடசாலைத் தொடர்பு விபரங்களைக் காணுங்கள்.

## தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை (Telephone Interpreter Service)

பாடசாலையுடன் தொடர்புகொள்வதில் உங்களுக்கு மொழிபெயர்த்துரைப்பாளர் உதவி தேவைப்பட்டால், 13 14 50-இல் ‘தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை’யை அழைத்து உங்கள் மொழியில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள். நீங்கள் அழைக்க விரும்பும் தொலைபேசி இலக்கத்தை நீங்கள் கொடுத்தால், உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காகத் தொலைபேசி இயக்குனர் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படமாட்டாது.